குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.584/2025

அ.சா.1

2026–ம் ஆண்டு ஜுலை 10–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 1–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபு | தொழில் | |
| தந்தை பெயர் | சேகர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.23 மணி,

Accused A1)Moorthi, A2)Jayapriya are present. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கருப்பனம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2023 ஆம் ஆண்டு எனக்கும், என் மனைவி கீர்த்தி என்பவருக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டிருந்தது. மேற்படி கருத்து வேறுபாடு உருவாக இரண்டாம் எதிரி தான் என் மனைவிக்கு சொல்லிக் கொடுப்பதாக கேள்விப்பட்டு, நான் அவரிடம் எங்கள் குடும்ப விசயத்தில் தலையிட வேண்டாம் என்று சொல்லி வந்தேன். கடந்த 19.01.2023 ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் எதிரிகளின் வீட்டருகே சென்போது இந்த பிரச்சினை சம்மந்தமாக எங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

2. சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்து எனக்கு கண் அருகே காயம் ஏற்பட்டது. நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். அப்போது போலிசார் அங்கு வந்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.10 17:26:01 +0530

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் கையெழுத்து செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 19.01.2023 ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் எதிரிகளின் வீட்டருகே எதிரிகள் இருவரும் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, 2 ஆம் எதிரி நகத்தால் என் வலது கழுத்தில் கீறி காயம் ஏற்படுத்தினார் என்றும், 1 ஆம் எதிரி இரும்பு பைப் ஊதாங்குழலால் என் வலது கண்ணுக்கு கீழ் அடித்து காயம் ஏற்படுத்தியதாக கூறி புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.28 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.10 17:26:05 +0530